உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௪௯.] விஜய ௵ — ஆடி-மீ [பகுதி-௯.

Vol. 49. July—August 1953 No—9.

பண்டைக் கேரளத்தில் கூத்தும் இசையும் *

பேராசிரியர், திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள்,
திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம்.

சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக, கேரளமக்கள் கூத்து, இசை என்ற இருகலைகளையும் மிகவும் போற்றி வளர்த்துள்ளார்கள். கேரள-அரசர்களிற் சிலர் அழகிய கீர்த்தனங்களை இயற்றினர். உதாரணம்: ஸ்வாதித்திருநாள் கீர்த்தனைகள். இவ் அரசபரம்பரையினர் ஒருவர் பாலராம பரதம் என்ற நூலை வடமொழியில் இயற்றியுள்ளார். சிறந்த இசை நிபுணர்களை இத் தேசத்து மன்னர்கள் தங்கள் ஆஸ்தானத்தை அலங்கரிக்கச் செய்துள்ளனர். நர்த்தன நர்த்தகியர் சிலர் நிருத்தக்கலையில் இந்நாடு சிறந்து விளங்குவதைக் குன்றின்மேலிட்ட தீபம்போல் எங்கும் தெரியும்படி செய்துவருகிறார்கள்.

தற்காலக் கேரளம் இப்படி. பண்டைக் கேரளத்தில் இவ் இருகலைகளின் நிலைமையும் எவ்வாறிருந்தது? இதனைத் தெரிய முயலுமுன், பண்டைக் கேரளம் என்றால் எக்காலத்தது என நாம் வரையறை செய்து அறிதல் வேண்டும். முதன்முதலாக, அசோக சக்கரவர்த்தி இத்தேசத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதனோடு சேர்த்துக் கூறிய சோழ பாண்டிய நாடுகளைப்போல் இதுவும் தமிழ்நாட்டின் ஒரு பகுதியேயாம். தனிப்பட்ட

---

* திருவனந்தை அகில இந்தியரேடியோவில் பேசியதை விரித்தெழுதியது.

ராஜ்யமாயிருப்பினும், இங்கு வாழ்ந்தவர்கள் தமிழ்மக்களே; இங்கு வழங்கியதும் தமிழ் மொழியே. இதற்குச் சான்றுகள் மிகப்பல. அவற்றையெல்லாம் விவரிக்க வேண்டும் அவசியம் இல்லை. கேரளரைச் சேரர் என்பது தமிழ்வழக்கு. இக் கேரளமக்களுக்குப் பல நூற்றாண்டுகளாகத் தாய்மொழியா யமைந்த தமிழில், பிராதேசிக வழக்குக்கள் சிறிது சிறிதாகப் புகத்தொடங்கி, காலகதியில் பெருகின. கி. பி. 10-ஆம் நூற்றாண்டளவில், கேரளநாட்டினரின் தமிழ் செந்தமிழிலிருந்து பெரிதும் வேறுபடத் தொடங்கியது. மலையாள மொழி என்ற ஒரு மொழி சில சிறப்பியல்களுடன் தோன்றியது. இம்மொழி தோன்றி, "ராமசரித" காலம் வரையுள்ள கேரளமே 'பண்டைக் கேரளம்' என்று கூறத்தக்கது.

இதற்கு முன்பு கழிந்த நீண்டகாலமெல்லாம் சேரநாட்டில் வழங்கியவை, மூன்று தமிழ்நாடுகளுக்கும் பொதுவாயிருந்த கூத்தும் இசையுமேயாம். இப்பண்டைக் கலைகளைக் குறித்துச் சிறிது தெரிந்துகொள்ளுதல் நலம். முற்காலத்தில், கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என நான்கு [1]வகுப்பினர் இருந்தனர் (தொல். புறத்திணை 36). இவருள், கூத்தர் கூத்துநடத்தியும் கூத்து ஆடியும் வந்தனர். விறலியர் பாடி ஆடி வந்த பெண்கள். பாணர் யாழ் முதலியவை வாசித்த இசைக்காரர். இம் மூவரில், கூத்தரும் விறலியருமே கூத்து என்னுங் கலைக்கு உரியவர்கள். இக்கூத்து 'dance' என்று ஆங்கிலத்திற் கூறுவதனையே முற்காலத்திற் குறித்தது; பிற்காலத்தில் இக்கலை இழிநிலை யெய்திவிட்டது; இச் சொல்லும் பொருளில் இழிநிலை அடைந்தது. இக்காரணத்தால் பலவகையான இழிபொருள்களும் சில ஆண்டுகட்கு முன் வரை இதற்கு ஏற்பட்டிருந்தது. இக் கலையைப் புனருத்தாரணம் செய்யும் முயற்சி சமீப காலத்தில் நிகழவே, கூத்து என்பதனை நல்ல பொருளிலும் இப்போது வழங்கி வருகிறோம். எனினும் நாட்யம் அல்லது நிருத்தம் என இக் கலையை வழங்கினால், மயக்கம் ஏற்படாது.

கூத்தர்களுக்கு நிலைத்த இருப்பிடம் இருந்ததாகத் தெரியவில்லை. பல ஊர்களுக்குஞ் சுற்றம், பாணர், விறலியர் முதலியோருடன் (மலைபடு. 40, 46) சென்று, அவ்வூராருடைய ஆதரவில் ஏதேனும் ஒரு பொது

[1]இவர் தம்முள் வேற்றுமையை நச்சினார்க்கினியர் (புறத். 36 உரை) ஒருவாறு விளக்கியுள்ளார்.

இடத்தில் தம் கூத்தை நிகழ்த்தி வந்தனர். கூத்து நிகழும் இவ் இடத்திற்கு 'ஆடுகளம்' என்று பெயர். இக் களத்தில் கூத்தர்கள் தமது சுற்றத்தோடு சென்று பாட்டுக்கள் பாடி, அவற்றிற்கு ஏற்க அபிநயங் காட்டி ஆடுவது வழக்கம். இவர்கள் கூத்து நடத்தும்போது, சிலர் நட்டுவர்கள் போலப் பின்னின்று முழவு, பறை முதலிய கொட்டுதலும் யாழ் வாசித்தலும் செய்வர். கண்ணுளர், கோடியர், வயிரியர் என இவர்களை அழைத்து வந்தனர். சங்கச் செய்யுட்களில், கூத்தர், கூத்து என்பவை அருகியே காண்பன; இவை கூடுதி என்னும் வடசொல்லோடு தொடர்புடையதாகலாம். மற்றைப் பரியாய பதங்களே மிகுதியாயுள்ளன.

கூத்தர்கள் பல ஊர்களுக்கும் சென்ற ஸமயஸந்தர்ப்பமும் அறிதற்குரியது. எங்கேனும், ஏதேனும் விழா நடக்கும்போது இவர்கள் அங்கே செல்வார்கள். இவருள் ஒருவகையார் 'பொருநர்' என்பார்; அறுவடைக் காலத்தில் நெற்களஞ் சென்று ஏர்க்களத்தைப் பாடுவர். ஓர் அரசன் போர்க்குச் சென்று வெற்றியுடன் திரும்பிய காலையில் இவர்கள் அவன் முன்னிலையிற்போய், போர்க்களத்தைப் புகழ்ந்தும் பாடுவர். இவ்வாறு செல்வதைத் தவிர, அரசர்கள் வள்ளல்கள் முதலியோரிடம் சென்று, தங்கள் கலைவன்மையைக் காட்டிப் பரிசுபெற்று மீளுதலும் முற்காலத்திற் பெருவழக்காயிருந்தது. பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படைகள் இதற்குச் சான்று. கூத்தராற்றுப்படை என்ற பெயர் கொண்டே ஒரு நூலும் உளது.

சேரநாட்டிலும் இக்கூத்தர்கள் சென்று, தங்கள் கலைத்திறமையை அங்குள்ள அரசர்களிடம் புலப்படுத்திப் பரிசு பெற்றுள்ளார்கள். இது

> கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்தும்
> தண்கடல் நாடன் ஒண்பூங் கோதை
> பெருநா ளிருக்கை

என்ற மதுரைக் காஞ்சியால் விளங்கும். கோடியர் - கூத்தர்; கோதை- சேரன். சுமார் கி. பி. 3-ம் நூற்றாண்டில் இப்பாட்டு இயற்றப்பட்டது. அக்காலத்தில் சேரநாட்டில் தமிழ் நாட்டிலுள்ள நிருத்தக்கலையே வழங்கி வந்ததென்பதற்கு இப்பாடற்பகுதி சிறந்த சான்றாம்.

கூத்து இங்ஙனமாக, இனி அக்காலத்து இசையை நோக்குவோம். இக்கலையினால் பண்டைமக்களை இன்புறுத்தியவர்கள் 'பாணர்' என்பார்.

இச் சொல்லே 'பாடுவோர்' என்று பொருள்படும். இவர்கள் இசைப் பாணர், யாழ்ப்பாணர் எனப் பலவகையினர். யாழ்ப்பாணரும் சிறு பாணர், பெரும்பாணர் என இருவகைப்படுவர். இவர்கள் வாசித்துவந்த யாழின் அமைப்பு நமக்கு நன்றாகப் புலப்படவில்லை. யாழுறுப்புக்கள் சில பொருநராற்றுப்படையிலும் (4-22), பெரும்பாணாற்றுப்படையி லும் (5-15), மலைபடுகடாத்திலும் (21-37) கூறப்படுகின்றன. இவற்றா லும் பிற குறிப்புக்களாலும் இது சிறந்த ஓர் இசைக்கருவி யென்பது புலப்படுகிறது. பெரும்பாலும் வீணையைப் போன்றதொரு கருவி யாகவே இது இருத்தல் கூடும்.

இப் பாணர்கள் அரசர், வள்ளல் முதலியோரிடம் சென்று தங்கள் இசை நயத்தால் அவர்களை இன்புறுத்தி, பொற்பூ முதலிய பரிசுகள் பெற்று மீண்டனர். அன்றியும், அரசர்களது ஓலக்கத்தில் ஓர் அங்கமாக வும் இவர்கள் விளங்கினர். சிறுபாணாற்றுப்படைக் காலத்தில் (சுமார் கி.பி. 325) இசைக்கலை சீரியவொரு நிலையிலிருந்ததென்று ஊகிக்கலாம்.

இப்பாணர் குடும்பங்கள் சேரநாட்டிலும் வாழ்ந்து இசைக் கலையை வளர்த்து வந்தனர். பாணர் என்ற ஜாதி பண்டைக் காலத்தில் சேர நாட்டிலும் இருந்தது. இவர்கள் தொழில் மந்திரவாதம் என்பர் T. K. கோபால பணிக்கர். இது பிற்காலத்தில் இவர்கள் மேற்கொண்ட தொழி லாயிருக்கவேண்டும்.

வெகு சீக்கிரத்தில் இவ் இருகலைகளும் ஒரு புதிய சிறப்பினை எய்தத்தொடங்கின. இச் சிறப்பியல்பு பெரும்பாலும் ஆரியர் தொடர்பு மிகுந்ததனால் உளதாயிற்று. இக்கலைகளைப் பற்றி நூதன கருத்துக்கள் எழுந்தன. தேவர்கள் வேண்டிக்கொள்ள, பிரம்மா நாட்யகலையைச் சிருஷ்டித்தனர் என்றும், அவரது ஆணையின்படி பரதமுனி நாட்ய சாஸ்திரத்தை இயற்றினர் என்றும், இக் கலைக்குத் தெய்வத்தன்மை ஏற்றினர். முன்பு விறலியராயிருந்தவர்கள் இப்பொழுது கணிகையராய், நாட்யம் நிகழ்த்தினர். இவர்களுக்கும் தெய்விகத் தொடர்பு கற்பிப்பது அவசியமாயிற்று. இந்திரனது சபையில் ஊர்வசி நர்த்தனஞ் செய்து கொண்டிருந்தபொழுது, அவளும் இந்திர குமாரனும் ஒருவரை யொரு வர் விழைந்தனர். இதனைக் கண்ட அகஸ்தியர் சாபமிட, ஊர்வசி பூமி யிற் பிறந்து கணிகையர்குலத்து முதல் மங்கையாய், மாதவி யென்ற

பெயருடையளாய் விளங்கினாளாம். இவளது வழியில்வந்தவளே கோவலனுடைய காதற் கணிகையாகிய மாதவி யென்று சிலப்பதிகாரம் கூறும் (3, 1-6).

நாட்யகலையைப் போலவே, இசைக்கலையும் தெய்விகத் தொடர்பு உடையதாகக் கருதப்பட்டது. நாரதரை யாழாசிரியர் எனச் சிலப்பதிகாரம் கூறும் (6, 18 உரை). தேவ ஜாதியாராகிய கந்தருவர்களும் இசைக் கலைக்கும் யாழுக்கும் உரியராயினர் எனத் தொல்காப்பியம் கூறும். வடநாட்டில் காலக்கிரமத்தில் தோன்றி வளர்ந்த இக்கருத்துக்களைப் பரதநாட்யசாஸ்திரம் அறுதிசெய்து முத்திரை யிட்டதென்று கொள்ளலாம். இதன் காலம் சுமார் கி. பி. 4-ம் நூற்றாண்டென்பர்.

இவ்வாறாக இக்கலைகளின் மதிப்பு நாளடைவில் உயர்ந்துகொண்டே வந்தது. தெய்வங்களும் இவற்றின் வசீகரசக்திக்கு உட்பட்டு அவைகளை ஆடவும் பாடவும் செய்தன வென்று கற்பித்தனர். சிவன் ஸாமகீதம் பாடியமை புராணப் பிரஸித்தமான செய்தி. சிவன், திருமால், முருகன், உமை முதலிய தெய்வங்கள் ஆடியஆடல்கள் பதினொன்றென்பர் (சிலப். 6, 40-66). இந்த ஆடல்கள் இத் தெய்வங்களின் சரித்திரத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியின்போது இவைகள் ஆடிய கூத்துக்களாம். இவற்றைக் கூத்தர்கள் அபிநயித்துக் காட்டினர். தெய்வங்கள் ஆடிய நிலையில், செம்பினாலும் சிலையினாலும் உருவங்கள் அமைத்துக் கோயில்களில் மக்கள் வழிபட்டு வந்தனர். சிதம்பரத்திலுள்ள நடராஜவிக்கிரகம் இத்தகையதே. இங்குக் குறித்தன சுமார் 6-ம் நூற்றாண்டளவில் நிகழ்ந்தன என்னலாம். நாட்டியக்கலை இங்ஙனமாக, இசைக்கலை அரசர்களால் மிகவும் போற்றப்பட்டது. பல்லவ அரசர்களான மகேந்திரவிக்ரமன் (7-ம் நூற்.) ஒரு சித்திரக்கலை நூலும் சில சங்கீத நூல்களும் இயற்றினனென்று மாமண்டூர்க் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. புதுக்கோட்டையைச் சார்ந்த குடுமியாமலையில் செதுக்கி வைத்துள்ள ஸங்கீத நூலை இம்மகேந்திரனே இயற்றினனென்று ஆராய்ச்சியாளர் துணிந்துள்ளார்கள். (History of the Pallavas of Kanchi by R. Gopalan, p. 93.)

இக்காலத்திலிருந்து பல நூற்றாண்டுகளாகத் தென்னாட்டில் கோயில்கள் அமைக்கப்பட்டு வந்தன. சைவம், வைஷ்ணவம், முதலிய மதக் கிளர்ச்சிகளும் இக்காலத்தில் தோன்றின. கோயில்கள் கூத்து நிகழ்தற்குரிய இடமாகவும் அமைந்தன. சைவம் முதலியவை இக்கூத்துக்களை மதச்சார்புடையவை ஆக்கின. திருவாய்மொழிப் பாசுரங்களை அபிநயித்துக் காட்டுதல் பெருவழக்காய் இருந்தது. இவ்வாறு அபிநயத்துடன் பாடுவோர் அரையர் என்பவர். திருவாய்மொழியின் காலம் சுமார் 10-ம் நூற்றாண்டு. ஆறும் நூற்றாண்டிலிருந்து இக்காலம்வரை தமிழ் நாடுகளில் கோயில்கள் அமைத்ததைப் பின்பற்றிக் கோளநாட்டிலும் கன்னியாகுமாரி, சுசீந்திரம், திருவாட்டாறு, அனந்தசயனம் முதலிய இடங்களில் கோயில்கள் இயற்றப்பட்டன. இக் கோயில்களில் கூத்துக்களும் நிகழ்ந்துவந்தன.

தெய்வ சந்நிதியில் கூத்தர், பாணர் முதலியோர் செல்லுதல் இயலாது. ஏனெனில் இவர்கள் இழிகுலத்தினர். 'புலைமக னாதலிற் பொய்ந்நின் வாய்மொழி நில்லல் பாண' (பொருள். இளம். பக். 256). எனவே இவர்களது உரிமையாயிருந்த கலைகளை உயர்குலத்தினர் கையாளத் தொடங்கினர். இதன்விளைவாக, கூத்து கணிகையரிடத்தும், இசை யாழாசிரியன், குழலாசிரியன் முதலியோர்களிடத்தும் அடைக்கலம் புகுந்தன. கூத்தரும் பாணரும் தொன்றுதொட்டுவந்த தங்கள் குலத் தொழிலை அறவே கைவிட வேண்டியதாயிற்று. பூர்வ சமுதாயத்தில் அவர்கள் நிலைமை சீர்குலைந்துவிட்டது. தலைவன் தலைவியர்க்கிடையில் தூதுசென்று சமாதானம்செய்வது தான் இவர்கள் தொழிலாய் முடிந்தது. தலைவனைச் சார்ந்து வாழும் ஏவலாளராய் இவர்கள் அமைந்துவிட்டனர். தொல்காப்பியர் இந்நிலைமையைக் கூறியுள்ளார்.

சோழபாண்டிய நாடுகளில் கூத்தரும் பாணரும் 10-ம் நூற்றாண்டளவில் பெரும்பாலும் மறைந்துவிட்டனர். இவர்களுக்குரிய கூத்து வகைகளில் ஒன்றை சாக்கையர் என்ற ஒரு வகுப்பினர் நிகழ்த்தி வந்தனர். இவர்கள் 10-ம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்த தமிழ்நாட்டுத் தமிழ்ச்சாஸனங்களில் குறிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களும் வள்ளுவரும் ஓரினத்தவரே எனத் திவாகரம் கூறுவதனால், இவர்கள் தாழ்ந்த பிறப்பினரே ஆவர். மலையாள நாட்டிலும் இவர்கள் சென்று பல இடங்

களில் குடியேறினர். இவர்களைக் கொச்சி ஜனசங்கியைப் பத்திரம் பரதேசிகள் என்று குறிப்பிடுகிறது. மலைநாடு சென்றதும் இவர்களது குலம் அந்தணத்தொடர்புடையதாகக் கருதப்பட்டது. கோயிலினுள்ளே கூத்தம்பலத்தில் கூத்து நடத்துவதும், புராண இதிகாசங்களிலிருந்து வடமொழிச் சுலோகங்களைச் சொல்லி வியாக்யானம் செய்வதும் அந்தணர்பிறப்பைச் சார்ந்தார்க்கன்றி ஏனையோர்க்கு ஆகாதல்லவா? ஆனால் அந்தணர்கள் இவர்களைத் தங்கள் குலத்தினர் என்று ஒத்துக்கொள்ளவில்லை. ஒரு மிசிரகுலத்தினர் என்றே இவர்கள் கருதப்பட்டு வந்தார்கள்.

இவர்களது குடும்பம் ஒன்று பறையூரில் வாழ்ந்து வந்தது. இக்குடும்பத்தவன் ஒருவனைச் சிலப்பதிகாரம்

பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையன்

என்று குறிக்கின்றது. இவன் ஆடிய ஒரு கூத்தினை, சேரன்செங்குட்டுவன் கண்டு களித்தனன் என்று இக்காவியம் கூறும். முதன்முதலாகச் சாக்கையரைப்பற்றிய குறிப்பு, சிலப்பதிகாரத்தில்தான் காணப்படுகிறது. எனவே முன் குறிப்பிட்ட சாசனத்திற்கு இக்காவியம் மிகமுற்பட்டது ஆகாது; ஒரு நூற்றாண்டு முற்பட்டிருக்கலாம்.

கேரளதேசத்துக் கூத்துக்களில் முதன்முதலாகத் தெரியவருவதும் இச்சாக்கையரது கூத்தேயாம். கோவிலுள்ளே கூத்தம்பலத்தில் ஓர் உயர்ந்ததிண்ணையின் நடுவில் மூன்றுகால்பீடத்தில் சாக்கியார் கையிலும் இடையிலும் காலிலும் சதங்கை கட்டிக்கொண்டு அமர்ந்திருப்பர். அவர் அணிந்துள்ள ஆடை விநோதமாயிருக்கும். ஆனால் அவரது ஜரிகைத் தலைப்பாகை வசீகரமாகவே தோன்றும். வலப்பக்கத்தில் அவருடைய மனைவி நங்கியார் வெள்ளாடை உடுத்து, தலைமுடியை முன்கொண்டை இட்டு அழகாக விளங்குவாள். அவள் சாக்கியார் பாடும்போது கைம்மணி அடிப்பாள். இருவருக்கும் சற்றுப் பின்புறமாக, ஒரு நம்பியார் நின்று முழவுகொட்டுவார். இராமாயணம், பாரதம், புராணம் இவற்றிலிருந்து ஏதேனும் ஒரு பொருள்பற்றிச் சாக்கியார் பிரசங்கிப்பார். இடைவிடாது 3 அல்லது 4 மணிநேரம் வடமொழிச் சுலோகங்களையும் மலை

யாள சுலோகங்களையும் எடுத்துக்கூறி வியாக்கியானித்தவண்ணமாயிருப்பர். இடையிடையே நகைச்சுவைமிக்க வேடிக்கைப் பேச்சுகளும்நிகழும். இக்கூத்திற்கு வருவோர் நிசப்தமாய் முழுக்கவனத்துடன் கேட்டு மகிழ்வர். சாக்கியார் பேசும்போது யாரும் குறுக்கிட்டுப் பேசுதல் கூடாது.

இது தற்காலத்தில் வழங்கும் கதாகாலக்ஷேபம் போன்றுள்ளது. இதற்கும் சிலப்பதிகாரம் கூறும் கூத்திற்கும் யாதொரு தொடர்பும் காணவில்லை. காலகதியில் இம்மாறுபாடு நேர்ந்திருக்கவேண்டும்.

இக்கூத்தேயன்றி, வேறு பல கூத்துக்களும் பண்டைக் கேரளத்தில் வழங்கின. இவற்றுள் மிக முக்கியமானது கதைகளியாம். இதனை, 16-ம் நூற்றாண்டில் கொட்டாரக்கரை ராஜா தோற்றுவித்தனர் என்பர். பெயருக்கேற்ப, கதையை நாட்டியமும் நாடகமுமாக இது காட்டும். ஆனால் இதில் பேச்சு என்பதே இல்லை; வெறும் ஊமைக்கூத்துத்தான். ஆனால் பின்னணியாகச் சங்கீதம் பாட்டு முதலியன நிகழும். இக் கதைகளியின் பொருளும் இதிகாசங்களிலுள்ள ஏதேனும் ஒரு நிகழ்ச்சியேயாம். பெண்களுக்கென்று தனிப்பட்ட கூத்தும் முற்காலத்தில் வழங்கியது. இதனைத் திருவாதிரைக்களி என்பர். நடுவில் தீபத்தைவைத்து, சுற்றிவந்து பெண்கள் பலர் பாடி ஆடுவர். இதில் பலவகை யுண்டு.

பண்டைக் கேரளத்தில் இசைக்கலையைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ளச் சான்றுகள் இல்லை. ஆனால் பொதுப்பட நோக்கும் இடத்தில் இது சிறந்து விளங்கிற்றென்று தோன்றவில்லை.

கலைகளைப் போற்றவேண்டுமென்ற ஒரு முயற்சி தற்காலத்தில் தோன்றியுளது. இதனால் பண்டைக்கேரளத்திலிருந்த கூத்தும் இசையும் புத்துயிர் பெற்றுத் தழைத்து வருகிறது. இவை மேன்மேலும் சிறந்தோங்குக.

மொழி பெயர்த்தல்

மட்டுநகர் வித்துவான், பண்டிதர் திரு. F. X. C. நடராசா அவர்கள்,
Research Assistant, Official Languages Commission, Colombo.

வேற்று மொழிகளிற் பயின்றுவரும் கலைப்பொருளைச் செந்தமிழில் மொழிபெயர்த்துப் பயின்றுவரும் வழக்கம் தமிழகத்திற்குப் புதியதன்று. வழிநூல்கள் தோன்றும் முறையை வகுத்துக் கூறுமுகத்தான், ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியர்

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலொ டனைமர பினவே

என்று சூத்திரஞ் செய்துள்ளார். "மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்" என்ற முறைமைப் பிரகாரம் வழிநூல் தோற்றுதல் கூடுமென்பது ஆசிரியர் கருத்தாகும். அந்தக் காலத்தில் சங்கத மொழியினின்றும் பல நூல்கள் தமிழ் மொழியின் அதர்ப்பட, மொழிபெயர்க்கப்பட்டுண்டு. இந்தக்காலத்தில் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ்நூல்கள் ஆக்கப்பட்டு வருதல் கண்கூடு. ஆனால் அதர்ப்பட யாத்தல் நடைபெறுவது குறைவு. தற்காலத்தில் மொழிபெயர்க்கின்ற ஆசிரியர்கள் வார்த்தைக்கு வார்த்தை வைத்து மொழிபெயர்க்கின்றார்களேயன்றி நெறிப்பட யாத்துத் தமிழ்மரபு வழுவாது, வேற்றுமொழி கோரிய பொருளைப் போற்றுதமிழில், சீரிய வார்த்தைகளிற் பொதிந்து தருகின்றார்களில்லை. மொழிபெயர்ப்புக் கலைக்கு, எடுத்துக்கொண்ட இரு மொழி மரபினையும் அறிதல் வேண்டற்பாற்று. அப்படியாயின் தமிழ் மரபுதான் என்னை? என்பார்க்கு,

எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே

என்றார் நன்னூலாசிரியர். அஃதாவது எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எவ்வழியால் அறிவுடையோர் சொன்னார்களோ, அப் பொருளை அந்தச்சொல்லால் அவ்வழியால் சொல்லுதலே மரபாம்

என்க. செவிப்புலனுய ஓசைவழிக் கேட்டுக் கட்புலனுகிய பொருளுணர்வதெல்லாம், மரபுபற்ருக வருதல்வேண்டும் என்பதை நிலைநிறுத்தத் தொல்காப்பியரும்,

மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்

என்று வகுத்துள்ளார். இப்படித் தொல்லாசிரியர்கள் மரபு பற்றிக் கூறினர்களேயன்றி மொழிபெயர்க்கும் விதிமுறைகளைத் தொகுத்துக் கூறினரன்று எனின்; அற்றன்று, விதி வகுத்துக்காட்டினுர் ஆசிரியர் தொல்காப்பியனுர்:

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

என்றும்,

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்

என்றும்,

வடசொல் தமிழில் வருமாறு எடுத்தோதினுர். வடமொழி தென்மொழியோடியைந்த மொழியாகலின் வடமொழிக்கோதினவெல்லாம் வேறுதிசைச் சொற்களுக்கும் பொருந்துமாறு ஆராய்ந்து கண்டுகொள்க. ஆகவே ஆங்கிலமொழிக்கும் தமிழிக் கொள்ளுதல் பொருத்தமுடைத்து. இவ்வாறு மொழிபெயர்த்த சொற்கூட்டங்களைப் பொருளமைதிப்படச் சேர்த்தல்வேண்டுமென்பதை,

மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டும்

என்ருர் ஆசிரியர் தொல்காப்பியனுர். தொல்காப்பியரும் பவணந்தியாரும் எடுத்துக்காட்டிய முறைப்படிவந்த வடமொழிச் சொற்களெல்லாம், தற்சமம்தற்பவம் என்ற இருபெரும் பிரிவிலுளடங்கும். வடமொழிச்சொற்களுக்கே சிறப்பாக இலக்கணம் வகுத்திருந்தாலும், தமிழ்மொழியில் வந்தேறும் பற்பல நாட்டுத் திசைச்சொற்களெல்லாவற்றிற்கும் பொருந்தி, அவற்றையுந் தமிழ் மயமாக்க வேண்டிய பொதுவிதியைக் கைப்பற்றிவந்துள்ளார் நம் முன்னேயோர்.

இனி, தமிழ்மரபுதான் என்னை? அம்மரபுகாத்தல் மொழிக்கு அவசியமா? எந்தக் காரியமும் அந்தந்த முறைப்படி நடத்தல் வேண்டும், அன்றேல் அது சித்திபெறாது. ஆகவே மரபு அறிந்தே எக்காரியமும் செய்தல் தகும். தமிழ் மரபுதான் என்னே? என்பார்க்கு ஆன்றோர் நூலிற் கூறப்பட்ட யாவும் தமிழ் மரபாமென்க.

வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான

என்றும்

செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியின் நூனெறி பிழையாது
சொல்வரைத் தறியப் பிரித்தனர் காட்டல்

என்றும்

செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவஉள வெனினும் வந்தவற் றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே

என்றும்,

ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய மரபுநெறியைத்தழுவி நூல்செய்தல் வேண்டுமென்பது பெறப்படலாயிற்று. இக்கூற்றினையே சிவஞானசுவாமிகளும் "தொல்லாசிரியர் வழக்கே வழக்கு, பிற்காலத்து வேறுபட வழங்கப்படுமாயின் அவ்வழக்கு இலக்கணத்தோடு பொருந்தாதென விலக்குக" என்ற வாய்பாட்டாற் கூறியுள்ளார். தொல்லாசிரியர் இலக்கணத்துக்கு மாறாயின் மறுக்க என்றாராயினும்,

கடி சொல் இல்லைக் காலத்துப் படினே

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தையும்,

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

என்ற நன்னூற் சூத்திரத்தையும் மனத்திற் கொள்ளற்க என்பது அவர் கருத்தன்று. ஆனால் புதியன புகுத்தலும் பழையன கழித்தலும் நோக்கமன்று என்க.

இனி, தமிழ் மொழிக்குத்தான் மரபு என்பதொன்றுண்டு என்று நினைக்க வேண்டியதின்று. உலகிலுள்ள எல்லா மொழிகளுக்கு முண்டு. ஆகவே ஆங்கில மொழிக்கும் மரபு உண்டு. அம்மரபைத் தமிழிற் புகுத்தல் பொருத்தமற்ற செய்கையாகும். எம்மொழிக்கும் மரபுண்டேல் அம்மரபு எவ்வாறு தோன்றும் என்பார்க்கு, அவ்வம் மொழியின் எழுத்து, சொல், சொற்றொடர், மரபுத்தொடர், வசனம், வசனப்பொருள் என்றிவற்றின் கண்ணதாய் ஏற்படும் என்றறிக. தமிழ் மொழியில் மொத்தமுமாய் வித்தியாசமுமாய் 247 எழுத்துக்களுண்டு. இவ்வாறு மற்றும் மொழிகளுக்குமுண்டு; என்றாலும் ஒரு மொழியிற்காணப்படும் எல்லா எழுத்துக்களுக்கும் சமமான உச்சரிப்புள்ள எழுத்துக்கள் வேற்று மொழிகளிற் காண்பது அரிது. சில எழுத்துக்கள் மாத்திரம் ஒத்திருக்கும். இவ்வொவ்வாமையைக் கண்டு மயங்குதல் வேண்டா. ஆங்கிலங்கற்ற தமிழபிமானிகளிற் சிலர் ஆங்கில மொழியிலுள்ள B, F, H போன்ற உச்சரிப்புள்ள எழுத்துக்களில்லை; அவ்வுச்சரிப்புகளை மேற்கொள்ளத் தமிழிலும் எழுத்துக்கள் வேண்டுமென்கின்றனர். இக்கவலை தமிழ்மக்களுக்கு வேண்டியதாயின் ழ, ள, ர, ஞ, ங போன்ற தமிழ் எழுத்துக்கள் ஆங்கில மொழியிலே இல்லையென்ற கவலையும் ஆங்கிலேயருக்கும் வேண்டுமன்றோ? ஆனால் அவர்கள் அப்படிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே அவர்கள் எழுத்துக்கள் தமிழ்மொழிக்கும் வேண்டியதின்று. இன்னும் அவ்வாங்கில எழுத்துக்களை மேற்கொள்ளத் தமிழில் ஏற்பாடுகளுண்டு. வடமொழிக்குக் கூறிய பிரகாரம் ஆங்கிலமொழிக்கும் ஒட்டிக்கொள்க, என்பதே விதி. அவற்றுள்,

ஏழாமுயி ரிய்யும் இருவும் ஐவருக்கத்து
இடையில் மூன்று மவ்வும் முதலும்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேலொன்று சடவும் இரண்டு சதவும்
மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்
ஆவீ றையும் ஈயீ றிகரமும்

என்று வடமொழி எழுத்துக்கள் மாறிவருமாற்றை வகுத்துக் காட்டியுள்ளார் பவணந்தியார். இன்னும் உலகவழக்கில் ஆங்கில எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களில் மாறிவருமாற்றையும் கண்டு களிக்க. Boat என்னுஞ் சொல் தமிழில் வத்தை எனவும், Coffee என்னுஞ் சொல் கோப்பியாகவும், Funnel என்னுஞ் சொல் புனல் எனவும் வந்துள்ளன.

இதுவரையும் எழுத்தைப்பற்றிய மரபு கூறப்பட்டது. இனி, சொல்மரபு ஆராயப்படும். வடமொழியிலிருந்து வரும் சொற்களெல்லாம் தற்சமம், தற்பவம் என இருபாற்படும். ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவாகவுள்ள எழுத்தாலாகி, விகாரமின்றித் தமிழில் வந்து வழங்கும் வடமொழி தற்சமம் எனப்படும். அமலம், கமலம், காரணம் இவை உதாரணங்களாம். ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலுமாகித் திரிதல் முதலிய விகாரம் பெற்றுத் தமிழில் வழங்கும் வடமொழி தற்பவம் எனப்படும். சுகி, போகி, சத்தி இவை சிறப்பெழுத்தாலாகி விகாரம்பெற்றுத் தமிழில் வந்துவழங்கும் தற்பவமொழி உதாரணங்களாம். அரி, அரன், சயம் இவை ஈரெழுத்தாலுமாகி விகாரம்பெற்றுத் தமிழில் வந்துவழங்கும் தற்பவ மொழிக்கு உதாரணங்களாம். இப்படியே வேறு மொழிச் சொற்களும் தமிழில் வந்துள்ளன; ஆனால் சிறப்பெழுத்துப் பொதுவெழுத்தென்ற விதியின்றி யென்றுணர்க. Quart என்னுஞ் சொல், கொத்து என வழங்குகிறது. அது போல் Court என்னுஞ் சொல், கோடு என மரீஇ வழங்குகின்றது. இப்படியாக வரும் உதாரணங்கள் பல. இவை பின் காட்டப்படும்.

மொழிபெயர்த்தல் என்னுந் துறையில் எழுத்துப் பெயர்ப்பும் சொற்பெயர்ப்பும் அடங்கும். ஆகையின் அவையிற்றை எவ்வாறு பெயர்த்தல் வேண்டுமென்பதைச் சுருக்கியும் சுட்டியும் உரைத்தேம். இனி, சொற்களும் சொற்றொடர்களும், மரபுத்தொடர்களும் பொருள் வழுவின்றி மொழிபெயர்க்கப்படல் வேண்டுமென்பதை ஆராய்வாம்.

ஆங்கில பாடசாலைகளிலே, வகுப்பிற் குறைவான மாணாக்களைப் பார்த்து "Goose" என்று இகழ்ந்து, முட்டாள்பட்டங் கட்டுவர். இந்த Goose என்ற வார்த்தையை அப்படியே மொழிபெயர்த்து, "வாத்து" என்றால் அர்த்தம் ஒன்றுமேயிராது. என்றாலும் Goose என்ற வார்த்தைக்கு வாத்து என்பதே பொருள். ஆனால் ஆங்கிலத்தில் வந்த அர்த்தத்தில் தமிழில் வந்தமையவில்லை. ஆகவே ஆங்கிலத்தில் Goose என்றதன் பொருளைத் தமிழிற் புலப்படுத்த வேண்டுமேயானால் "மோடா முருக்கைமரமே" என்றே சொல்லுதல் வேண்டும். அப்போதுதான் பொருள் விளங்கும். ஆங்கில மொழியில் மடையனைப்பார்த்து Goose என்று சொல்வது அம்மொழிக்குரிய மரபாகும். அஃதேபோல் தமிழ்மொழியில் ஏசுதல் வேண்டுமாயின், "மோடா முருக்கைமரமே" என்றே சொல்லுதல் வேண்டும். இப்படி மொழிபெயர்த்தலே முறையானது. ஆங்கில மொழியில் நடக்கும், ஓர் கூட்டத்தில் பேசும் ஒருவர் "Mr. Chairman! Ladies and Gentlemen!" என்று விளித்துப் பின் தன் பேச்சைஆரம்பிப்பர். இதனை அப்படியே மொழிபெயர்த்தால் திரு, கதிரை மனிதன்! மங்கையரும் சுகுண மனிதரும்! என்றே மொழிபெயர்த்தல் வேண்டும். இப்படி மொழிபெயர்ப்பதால் பிரயோசனம் ஒன்றுமில்லை. ஆகவே இதனைத் தமிழ்முறைப்படி, அஃதாவது தமிழ் மரபுப் பிரகாரம் மொழிபெயர்த்தால், சபாநாயகரே! சபையோரே! என்றோ, அல்லது "தலைவர் அவர்களே! கண்ணியமுள்ள சகோதர சகோதரிகளே! வணக்கம்" என்றோ மொழிபெயர்த்தல்தான் சால்புடைத்து. இப்படி அதர்ப்படயாத்தலுக்கு உதாரணங்கள் பல கூறலாம். பாருங்கள் "Pilgrims' Progress" என்ற அழகிய ஆங்கில நூலை மொழிபெயர்த்தவர்கள் அதனை "இரட்சணிய யாத்திரை" என்பர். எவ்வளவு அழகான பொருள்பொதிந்த மொழிபெயர்ப்பு இது? இதனை விட்டுச் சொல்லுக்குச் சொல்லாய் "யாத்திரைகாரனின் முன்னேற்றம்" என்றால் யாருக்கும் ஏதேனும் விளங்குமோ! என்பது ஐமிச்சம். இவை சொற்களோடு சம்பந்தப்பட்ட மொழிபெயர்ப்பு. இனிச் சொற்றொடர்களைப்பற்றி ஆராய்வோம்.

இலகுவில் பயப்படுகிற ஒரு மனிதனை பயங்கொள்ளி, கோழை யன் என்றெல்லாம் தமிழ்மொழியிற் சொல்லுவோம். ஆனால் ஆங்கிலத்திற் சொல்லும்போது, Chicken hearted fellow என்பர். இதனை மொழிபெயர்த்தால் 'கோழிக்குஞ்சு நெஞ்சன்' எனலாம். கோழிக்குஞ்சு நெஞ்சு முனைத்து வெளிவீசியிருக்கும்; மாந்தர்க்கு நெஞ்சு உள்வீசிக் குவிந்திருக்கும். ஒரு சிலரின் நெஞ்சு கோழி நெஞ்சுபோல் கூர்விழுந்திருக்கும். அப்படியாயின் ஆங்கிலத்தில் கருதியபொருள் தமிழ் மொழிபெயர்ப்பில் தொனிப்பதெப்படி? அம்மொழிபெயர்ப்பு வேறு பொருளைத் தருகின்றது. இன்னும் பட்டினப்பக்கங்களில் ஆடுமாடுகளை, மேய்ப்பான்-பார்ப்பான் இன்றி அலைந்துதிரிய விடமாட்டார்கள். இப்படி அலைந்து திரியும் மாடு களை ஆங்கிலத்தில் Stray Cattle என்பர். இதனை மொழி பெயர்ப் பார் "அலைந்து திரியும் மாடுகள்" என்கின்றனர். ஆனால் இதன் உண்மை மொழிபெயர்ப்பு "கட்டாக்காலிகள்" அல்லது "கட்டாக் காலி மாடுகள்" என்பதே. பொருள் சிறக்க, மாபு விளங்கக் கேட் டார்ப்பிணிக்குந் தகையவாய் மொழிபெயர்ப்பதே வேண்டுவது.

ஒரு நாடகத்தையோ அன்றேல் ஒரு கூட்டத்தையோ நடத் தும்போது "under the patronage of" என்ற சொற்றொடர்ப் பிரயோகத்தை உபயோகித்து விளம்பரப்படுத்துவர். இதனை மொழிபெயர்ப்பவர்கள் "பரிபாலனத்தின் கீழ்" என்று மொழி பெயர்ப்பர். இந்தக் "கீழ்" இங்கு அவசியமா? "பரிபாலத்தின் மேல்" கூட்டம் நாடகம் ஏதேனும் நடப்பதுமுண்டோ? அப்படி யில்லையாயின் "கீழ்" என்ற பிரயோகம் ஏன்? பரிபாலனத்தில் நடை பெறும் என்றூற் பொருள் தராதா? இலக்கணத்தில் வேற்றுமை யுருபுகள் அடுக்கிவருவனவல்ல; சாரியையின்மேல் உருபு வருதல் கூடும். அப்போது ஏன் இந்த அநாவசியகமான சொற்பிரயோகம்?

ஆங்கிலத்திற் பழமொழியொன்றுண்டு. அஃதாவது 'Carrying coal to new castle' என்பதே. இதனை மொழிபெயர்த்தால் "நியுக் காசில் என்ற இடத்திற்குக் கரி கொண்டுபோதல்" என்றாகும். இதனை விளங்கிக்கொள்வது அரிது. இக்கூற்றினை மாற்றி "யாழ்ப் பாணத்திற்குப் பனங்கொட்டை கொண்டுபோதல்" என்றால் எவ் வளவு திருத்தமும் பொருத்தமுமாயிருக்கும்?

மேற்கூறிய உதாரணங்கள்போற் பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு. இவைமூலம் நாம் அறிவதொன்றுண்டு. அதுதான் தமிழ் மரபு தொனித்தல். வசனத்திலாயினுஞ்சரி செய்யுளிலாயினுஞ்சரி தமிழ் மரபு ஒலித்தல்வேண்டும். இந்தமரபு தமிழிலே பழகினவர்களுக்கே பெரிதும் புலப்படும். தமிழருடன் தமிழராய்ச் சீவியாதவர்களுக்குப் புலப்படாது. செந்தமிழ் மொழியில் பேரபிமானம் பூண்டு அதனை ஐயந்திரிபறக்கற்று இலக்கிய இலக்கணநூல்களை ஆக்கியவரும், அந்நியதேச புருடருமாகிய வீரமாமுனிவர், தமிழினைக் கற்கத்தொடங்கிய காலத்தில் அதன் மரபுதெரியாது "கோழி தன் குட்டிகளைக் காப்பதுபோல்" என்று பிரசங்கஞ் செய்தபடியாற்றான் தமிழை மேலும் மேலும் படித்து மேம்பாடடைந்தனர். வீரமாமுனிவர் "கோழி தன் குட்டிகளை" என்று சொன்னதும் கோவிலில் ஆராதனைக்குக் கூடியிருந்த அத்தனைபேரும் சிரித்தனர். சிரிப்பின் காரணத்தைக் கேட்டறிந்தனர் முனிவர்; பிழையை உணர்ந்தனர்; நன்கு கற்றனர்; விற்பன்னராயினர். நூல்களும் ஆக்கினர். தமிழ் நூல்களுக்குப் புத்துயிரளித்த உ. வே. சாமிநாதையர் அவர்களுக்குப் பிரான்சு தேசத்திலிருந்தார் நண்பர் ஒருவர். அவர் மிகுந்த தமிழ் அன்பர். அவர் பெயர் ஜூலியன் வின்சன். பாரிசுநகரத்துப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமைபார்த்தவர். தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர். ஆனால் தமிழ் மக்களுடன் பழக்கம் சிறிதுமில்லாதவர். ஆகவே தமிழ் மரபு முறைகளிற் பயிற்சியற்றவர். இருவர்க்குமிடையில் கடிதப் போக்குவரத்து இருந்தது. தமிழ் மொழியிற்றான் கடிதங்கள் வரைவர். ஒருமுறை உ. வே. சாமிநாதையர் தாம் பதிப்பித்த இரு நூல்களின் இருபிரதிகள் அனுப்பி வைத்தார். நூல்களைப் பெற்றதும் வின்சன் அவர்கள் பின்வருமாறு கடிதம் வரைந்தனுப்பினர்:—

எனதன்பிற்குரிய ஐயாவே,

நீரனுப்பிய ௨ புத்தகங்களும் எழுதின கார்டும் என்கிட்ட சேர்ந்தன. ஆதலால் மிகவும் சந்தோஷம் பெற்றிருக்கிறேன். நீர் பெரிய வேலைக்காரனென்றும் மகா கனம்பொருந்தி வித்துவானாயிருக்கவேணுமென்றும் நினைத்துவருகிறேன்.

இது கடிதத்தின் முசுற்பகுதி. பாருங்கள்! தமிழ்மக்களோடு சேர்ந்து வாழ்ந்து தமிழ் மரபு அறிந்து கொள்ளாமையினலன்றோ? "நீர் பெரிய வேலைக்காரன்" என்று எழுத நேர்ந்தது. வேலை, தொழில், காரியம், செயல், அலுவல், பணி இவையெல்லாம் ஒரு பொருட்பன்மொழிகளாயினும், ஒவ்வோர் சொல்லின் உபயோகமே வேறு. இவ்வேறுபாட்டினை அகராதி பார்த்துப்படித்தல் அசாத்தியம். இன்னும் ஐயாவே! என ஆரம்பித்து 'நீர்' எனும் வார்த்தையைப் பிரயோகித்தமை தவறு. "கார்டும்" இது ஆங்கிலத்திலிருந்து அப்படியே மருவியது. இஃது இலக்கணமறியாதார் புகுத்திய வழக்கம். இலக்கணம் என்றதும் சிலருக்கு அப்படியே பிடியாது. ஏதோ அது காட்டுமிருகம் என்று நினைக்கின்றனர். அப்படிப்பட்டதல்ல அது. அஃது மொழியின் பொதுத் தன்மையைக் கூறுவது. வாழையடி வாழையாய் வந்த மொழியின் சிறப்பியல்புகளை எடுத்தியம்புவது. ரகர ஒற்றின்பின் டகரம் வருஞ்சொல் தமிழ் மொழியிலே ஒரு சொல்லேனுமில்லை. இதனையறிந்த ஆசிரியர்கள் இப்படிச் சொல்லாக்கல் தமிழ் மரபுக்காகாது; அது தமிழுமாகாது; என்று எடுத்துக்காட்டி இதுதான் தமிழ் இலக்கணமென்றால் வரும் குற்றம் என்ன? இழுக்கு யாது? முற்றும் பொருத்தமானதன்றோ? ஆகையாற்றான் தொல்காப்பியரும்,

> யரழ வென்னு மூன்று மொற்றக்
> கசதப ஙஞ நம வீரொற்றாகும்

என்று சூத்திரஞ் செய்துள்ளார். இச்சூத்திரத்தால் நாம் பெறுவது என்ன? ரகரத்தின் கசதப முதலிய எழுத்துக்களே வரும்; அப்படி வந்தால் ஈரொற்றாகும். இதுவே பொருள். ஆகவே ஆங்கிலத்திலுள்ள Card என்ற சொல்லுக்குத் தமிழ்ச் சொல் இல்லையா? இல்லையாயின் "கார்டு" என்று எழுதலாமா? இப்படி எழுதுவது தமிழை வளர்க்காது; பதிலாக அலங்கோலப்படுத்தும். அடுத்தது "சந்தோஷம்" என்னுஞ்சொல். இது வடமொழி; தமிழில் வரும் போது "சந்தோடம்" ஆகும். ஷ என்னும் வடமொழிக்கு "ட" என்னும் தமிழ் எழுத்தே வழங்குதல் வேண்டுமென்பது ஆசிரியர்

கொள்கை. "சந்தோடம்" என்று எழுத விரும்பாதவர்கள் மகிழ்ச்சி என்ற தனித்தமிழ்ச் சொல்லை உபயோகிக்கலாமே. கனியிருப்பக் காய்கவர்ந்தற்று என்ற கூற்றினுக்கு இலக்காவானேன்?

இனி, முறையான மொழிபெயர்ப்புக்குச் சில உதாரணங்களை எடுத்துக் காட்டி மொழிபெயர்ப்பிலிருக்கவேண்டிய தன்மைகளை ஆராய்வோமாக.

போர்த்துக்கீசர் இலங்கையை வந்தடைந்தபோது, கொழும்புத் துறைமுகத்தில் முதன்முதலாகக் கால்வைத்தனர். இவர்களைக் கண்டு பிரமிப்படைந்த துறை காவலாளர், தம்மரசர் பெருமானாகிய தர்மபராக்கிரமவாகுவுக்கு அறிவித்தனர். அங்கு வந்திறங்கிய போர்த்துக்கீசரைப்பற்றிய விபரமெல்லாம் சிங்கள மொழியிலேயே கூறியிருப்பர். அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளார்கள்.

"There is in our harbour of Colombo a race of people fair of skin and comely withal. They don jackets of iron and hats of iron. They rest not a minute in one place, they walk here and there. They eat bunks of stone and drink blood; they give two or three pieces of gold and silver for one fish. The report of their cannon is louder than thunder when it bursts. Cannon balls fly many a gawwa and shatter fortresses of granite."

இப்பகுதியினை மொழிபெயர்த்த தமிழ்ப் பெருமகனார்:

"சுத்த வெண்மையும் மிக்க அழகுமுடைய ஓர் நவீன சாதியார் இன்று நம் துறையிற் கால்வைத்தனர். இவர்கள் இரும்பாலாய தொப்பியும் பாதரட்சையும் உடையவர்களாய் ஓயாது ஓடியுலாவித் திரிகிறார்கள். இவர்கள் உண்பதோ வெண்ணிறக் கற்கள்; குடிப்பதோ உதிரபானம். ஒரு மீனுக்கு இரண்டு அல்லது மூன்று

வெண் பொன் நாணயங்களைக் கொடுத்து வாங்குவார்கள். இவர்கள் துப்பாக்கிகள் பேரிடிபோலும் முழங்கிப் பொழியும். குண்டுகளோ காதவழி தூரஞ்சென்று கனமதிலையுடைத்தெறியத் தக்கவை."

என்று அழகும் செம்மையும், உண்மையும் பொலியுமாறு மொழிபெயர்த்துள்ளார். தமிழாக்கத்தின் வசன நடையை நோக்குவார் எவரும் மொழிபெயர்ப்பு நடையென்று ஒருபோதுஞ் சொல்லவே மாட்டார். எழிலும், வனப்பும், சீரும், சுகிர்தமும் வாய்ந்த இன்னோர் மொழிபெயர்ப்பு வல்லுனரின் சொற்சித்திரத்தைப் பார்ப்போமாக.

பேரும் புகழுமிக்க யூலியசு சீசர் நாடகத்தில் வரும் அழகுமிக்க ஓர் பகுதியினையும் அதன் மொழிபெயர்ப்பையுந் தருகின்றேன். இருமொழியிலும் நன்கு அமைந்து கிடக்கும் பாங்கினைக் கண்டு அனுபவித்தல் வாசிப்போர் கடனாகும்.

Cowards die many times before their death s
The valiant never taste of death but once
Of all the wonders that I yet have heard
It seems to me most strong that man should fear

அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத் தாடவனுக் கொருமரணம் அவனிமிசைப் பிறந்தோர், அஞ்சுவர்என் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும் அன்மதி மூடரைக் கண்டாற் புன்னகைசெய்பவன்யான்

சொல்லுக்குச் சொல்லாய் மொழிபெயர்ப்பு அமையவில்லையென்ற குறை வேண்டியதில்லை. பொருள் பொதிந்து பொலிவதே போற்றற்குரியது. அதர்ப்படயாத்த மொழிபெயர்ப்புக்கு இன்னோர் பகுதியைப் பார்ப்போமாக. இஃது மில்தனார் என்ற ஆங்கிலக் கவியில் "சுவர்க்கநீக்கம்" என்ற நூலிலிருந்தெடுக்கப்பட்டது. சாத்தனின் சோதனையால் சுவர்க்கமிழந்த அத்தனும் அவ்வையும் இராப்பொழுதினை நித்திரையிற் கழித்தனர். விடியுமுன் எழுந்தான் அத்தன். அவ்வையோ துயின்றுகொண்டிருந்தாள். அப்போது அத்தன் மெள்ள அவ்வையைத் துயில்எழுப்புகின்றான்:

Awake

My fairest, my espoused, my latest found
Heavens lest, best gift, my ever-new delight
Awake; the morning shines,
How nature paints her colours, how the bee
Sits on the bloom extracting liquid sweet.

ஆங்கில நடையை ஒத்த தமிழ் மொழிபெயர்ப்பு இது:

"என்னுருயிர்த்துணையே! ஈசன் எனக்களித்த
செல்வநிதியே! செழுந்துயில்நீத் தேயெழுவாய்
புத்தமிழ்தே! அன்பே புலரிப் பொழுதினிலே
வாச மலர்க்கொடியில் வண்டினங்கள் தேன் அருந்தும்
விந்தையினைக் காண்போம் விழிதுயில்நீத் தேயெழுவாய்
வண்ணவண்ணப் பூக்கள் மலர்ந்தனகாண்"

என்றுரைத்தான்.

இஃதல்லவோ தமிழ்: செந்தமிழ்; பைந்தமிழ்; இஃதல்லவோ மொழிபெயர்ப்பு. இவ்வழகிய மொழிபெயர்ப்பினைத் தந்த அடிகளார் சுவாமி விபுலானந்தர், வார்த்தைக்கு வார்த்தை சொல்லடுக்கவில்லை. சுவரினைக் கட்டும்போது ஒரேமாதிரி செங்கல்லை அடுக்கிக்கொண்டுபோனால் "நில்லாய் நெடுஞ்சுவரே" என்று பாட, ஒரு கம்பனும் வேண்டும்; அன்றேல் தரை மட்டமாய்விடும். செங்கற்களை நிலைமாற்றியும் பொருத்தியும் கட்டிடவல்லான் கட்டுவது போற் சொற்களை நிலைமாற்றியும் பொருத்தியும் பொருள்பெற வைத்தல் வேண்டுமென்பது ஆன்றோர் துணிபு.

சங்கதத்திலிருந்து மொழிபெயர்த்த பல நூல்கள் தமிழில் உண்டு. ஆங்கிலத்திலிருந்தும் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. ஆங்கில மொழியில் கலைநூல்கள் அதிகமுண்டு. அவை தமிழ் மொழியில் இடம்பெறுதல் வேண்டும். இவ்வேலையில் இலங்கையிலே முதன்முதலாக ஈடுபட்டவர்கள் அமெரிக்கா தேசத்திலிருந்து

வந்த சமயபோதகர்களே. இவர்கள் மொழிபெயர்த்த நூல்கள் பல. அவை அருகிவிட்டன. பிரதிகள் பெற்றுக்கொள்ளுதல் பொறுப்பு. 1857ல் வைத்தியாகிய கல்வின் கற்றர் செய்த, அங்காதி சுகரணவாத உற்பாலன நூல், ச. வி. கிறின் வைத்தியரால் ஆராய்ந்தும் திருத்தியும் தமிழ் நாட்டாசாரங்களுக் கிசைவித்து, சில ஆசிரியருடைய உதவியைக்கொண்டு இங்கிலிசிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. 1871ல் தத்துவசாஸ்திரம் என்ற நூலும் (Physics) 1872ல் மனுஷ வங்காதிபாதம் என்ற நூலும் (Human Anatomy) 1857ல் கெமிஸ்தம் என்ற நூலும் (Chemistry) எழுதி வெளியிட்டனர். ஒவ்வொரு புத்தகத்திலும் சொற்களைத் தயாரித்த முறை கூறப்பெற்றுண்டு. அவர்கள் அநுட்டித்த நற்பிரமாணங்களாவன:

1 ஏற்ற தமிழ்ப்பதங்களைக் கண்டுபிடிப்பதில் மிகுந்தஆராய்ச்சி செய்தல் வேண்டும். இப்பதங்கள் தனிமொழிகளாகவோ, தொடர்மொழிகளாகவோ அன்றேல் சாதாரண சொற்களாகவோ, அசாதாரண சொற்களாகவோ இருக்கலாம். ஒரு பழஞ்சொல் அல்லது உலகோரால் அறியப்படாது இலைமறைகாய் போலிருக்கும் சொல், ஏற்றதாயின் அதனை எடுத்துக் காட்டி வெளிப்படுத்தித் தாய் மொழியை வளமுறச் செய்தல் அந்நியமொழியினின்றும் அப்படியே எடுத்துத் தமிழ்மயமாக்குவதிலும் சிறந்த தொண்டாகும்.

2 சொற்கள் மிகவும் சுருக்கமாகவிருத்தல் வேண்டும். ஆனால் அவற்றின் அமைப்பும் பிறப்பும் சந்த இன்னிசைக்கும் ஏற்புடைத் தன்மைக்கும் முரணுடையதாயிருத்தலாகா.

3 சொல் கிடைக்காத பட்சத்தில் வினையடிகளுடன் இடைச்சொற்களைச் சேர்த்து இடையூறுகளை நீக்குக.

4 ஏதாவதொரு சொல்லுக்குப் பல சொற்கள் பொருத்தமானவைபோல் தோன்றில் மிகவுஞ் சிறந்த சொல்லைத் தெரிந்தெடுக்கவும். அதனையே எப்பொழுதும் உபயோகிக்க.

5 ஆங்கிலத்திலுள்ள சொல்லையோ, மரபுத்தொடரையோ சொற்றொடரையோ, நன்கு விளக்குதல் முதற் கடமையாகும். பின் ஒவ்வோர் சொல்லையும் மொழிபெயர்க்க. பின் அவை எல்லாவற்றையும் ஒன்றுகூட்டிக் கருத்தை வெளிப்படுத்துக. ஆனால் எடுத்தாண்ட சொற்கள், இலக்கண அமைதிகளின்படி வேறுபொருள் தராமலமைந்திருக்கின்றனவோ என்று பார்த்தல் அத்தியாவசியகம்.

6 மேற்சொன்ன முறைகளின்படி ஏற்ற தமிழ்ப் பதத்தைக் கண்டுகொள்ள முடியாத பட்சத்தில், ஆங்கிலப் பதத்தையே தமிழ் வடிவமாக்கி உபயோகிக்க. தமிழின் சாயலின் வேற்று மொழியைக் கொண்டுவருவதற்கு முன் அதனைப் பெயர்ச் சொல்லாக மாற்றவும். சொல்லின் சத்த வித்தியாசங்களை யுணர்ந்து, தக்கமாதிரி தமிழ் விகுதிகள் கொடுக்கவும்.

7 மேலே சொல்லிய முறைப்படிவந்த சொல்லை இடைச் சொல் கொடுத்தும் சீர்ப்படுத்துக.

8 ஏதாவது ஒரு சொல்லை முறைப்படி தமிழ்மயமாக்குவதில் தொல்லையிருந்தால் சங்கத மொழியில் சொல் தேடவும்.

9 சங்கத மொழியில் அகராதிகளால் அங்கீகரிக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

மேற்போந்த விதிகளைக் கவனித்து வேற்றுநாட்டுக் கலைகளுக்குரிய பதங்கள் ஆக்கப்பெற்றன. இந்த முறைகளை அநுசரித்தே, வட்டுக்கோட்டை வித்தியாசாலை உபாத்தியாயர் வைரவநாதர் குமாரர் விசுவநாதரால் 'வீசகணிதம்' என்னும் நூல் 1855ல் தமிழிலே செய்யப்பெற்றது.

கலைச்சொற்கள் ஆக்குவதும் மொழிபெயர்ப்பில் ஒரு துறையாகும். இந்தியாவில் இந்த இயக்கம் முன்னரே ஆரம்பமாயது. இலங்கையிலும் இப்போது இவ்வியக்கம் ஆரம்பமாகிவிட்டது. கலைச்சொற்கள் ஆக்கும் முறையிற் பலர் அபிப்பிராயபேத முறுகின்றனர். அபிப்பிராய பேதங்கள், நியாய முறைகளை நன்கு பரிசிலனை

செய்யாமையினால் எழுந்தவையே எனலாம். தாய்மொழியின் தோற்றம், வளர்ச்சி, தன்மை, இலக்கண இலக்கியங்கள் இவற்றைப் பற்றிய நல்லறிவு கலைச்சொல் ஆராய்வோர்க்கு வேண்டியது. மரபும் வழக்கும் நன்கு விளங்கினாற்றான் கலைச்சொற்கள் செம்மையுறும்.

தனித்தமிழ்க் கட்சியார் எல்லாக் கலைச்சொற்களும் தனித்தமிழ் மொழியில் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பர். தனித்தமிழ் மொழி எக்காலத்தில் வழங்கினதோ தெரியவில்லை. தனித்தமிழில் எழுதிய நூலொன்றும் கிடையாது. தனித்தமிழில் நூலிருந்ததாக எண்ணுவதற்கும் சரித்திர சான்றுகள் எவையேனும் கிடைக்க வில்லை. ஆகவே இக்கொள்கை முறையற்றது. சரித்திரத்தில் இல்லை, முறையற்றது, ஆனபடியால் தனித்தமிழில் கலைச்சொற்கள் ஆக்கப்படாதென்பது சித்தாந்தமன்று. தனித்தமிழில் சொல் இல்லையென்றால், தமிழோடிணைந்த, சேர்ந்த அல்லது அதன் உதாரத் துப் பிறந்த மொழிகளிலிருந்தே எடுத்தல் வேண்டுமென்பதே ஆன் றோர் கொள்கை. உதாரணமாக Oxygen என்ற ஆங்கிலச் சொல் லுக்குப் "பிராணவாயு" என்று வழங்கி வருகிறோம். இதற்கு நேரிய தமிழ்ச்சொல் வழக்கிலிருந்ததாக இல்லை. தனித்தமிழ்க்காரர் இதற் குத் "தியகம்" என்பர். சீவான்மாக்களின் பிராணனுக்கு ஆதாரமா யிருப்பதினால் "பிராணவாயு" என்றனர் போலும். அதுபோலவே தீ மூட்டுவதற்கு உபகாரமாயிருப்பதினால் "தீயகம்" என்றனர். பிராணவாயு சங்கதச்சொல் என்பர்; தீயகம் தனித்தமிழ்ப்பதம் என் பர். பிராணவாயு என்னும்போது தீ பற்ற உதவியாயிருக்கும் என் பது தொனிக்கவில்லை. ஆனால் 'தீயகம்' என்னும்போது பிராணனுக்கு ஆதாரம் என்பது தொனிக்கவில்லை. கெமிஸ்தம் என்ற நூலில் 'அக்சிதம்' என நேர்மொழிபெயர்ப்புக் கொடுக்கப்பட்டுண்டு. தீயகம் என்ற சொல் சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கம் செய்த கலைச் சொற்கள் என்ற நூலிற் காணப்படுகின்றது. இவர்கள் கலைச்சொற் களை ஆக்கியபோது கையாண்ட இரண்டு அடிப்படையான கொள்கைகளாவன:

(1) சொற்கள் சுருக்கமாயும், தெளிவாயும், பொருள் பொதிந்தனவாயும் இருத்தல் வேண்டும்.

(2) அவை தமிழோடு தமிழாய்க் கலக்கும் இயல்பினவாக இருத்தல் வேண்டும்.

இவை இரண்டு கொள்கைகளையும் வைத்துக்கொண்டு கலைச் சொற்களை ஆக்கினார்களென்றும், இக்கொள்கைகளுக்கு முரண் இல்லாமல் வேறு மொழிகளிலிருந்து சொற்களைக் கடன்வாங்கலாமென்றும், முன்னமேயே கலந்து இப்போது வழக்கிலுள்ள பிற மொழிச் சொற்களையும் பயன்படுத்தலாமென்றும், வரையறுத்துள்ளார்கள். தெளிவான, குறுகிய, பொருள் செறிந்த சொற்கள், தமிழோடு தமிழாய்க் கலந்தியங்கவல்ல சொற்கள், இவையே கூடிய வரையில் இடம்பெற்றதாகப் பதிப்புரையில் கூறியுள்ளார்கள்.

ஆகவே மேற்கூறிய மூன்று பதங்களில் தியகமே சிறந்தது. ஏனெனில் தியக்துடன் சேர்ந்த வேறு பொருள்களுண்டு; அவற்றையும் சேர்த்துச் சொல்லுமிடத்து, தியகம் என்ற சொல் வாய்ப்புடையதாயிருக்கின்றபடியாலென்க.

வடமொழித் தாதுக்களிலிருந்து சொற்களையாக்கி, கலைச்சொற்களாக உபயோகிக்கவேண்டும் என்பது வேறோர் சாரார் கூற்று. தமிழிலாகாதெனில் வடமொழிக்குப் போதலே முறை. கனியிருக்கக்காய் கவர்தலாகாதசெயல்.

கலைச் சொற்களை மொழி பெயர்க்காமல், அப்படியே ஆங்கிலச் சொற்களை உபயோகிக்க வேண்டும் என்பது இன்னோர் சாரார் கூற்று. இது நியாயமானதன்று. இப்படிச் செய்வதிலும்பார்க்க அப்படியே ஆங்கிலத்திற் படித்துவிடுதல் சாலச் சிறந்தது. ஆகவே தாய் மொழிப்பிரச்சனை தேவைப்படாது; தாய் மொழியில் வேற்று நாட்டார் மொழிகளை மேவுதல் இயன்ற ஏற்ற முறையன்று. அம் மொழிகள் தாய்மொழியில் வரும்போது தாய்மொழிக்கோலம் கொண்டே வருதல் வேண்டும். அப்படி வந்த பல சொற்கள் தமி

மோடு தமிழாய் உலகவழக்கில் வழங்குகின்றன. இலங்கையை ஆண்ட வேற்று நாட்டாருள் முதலிடத்தைப் பெற்றவர் போர்த்துக்கால் தேசத்தவராவர். இவர்களின் சொற்கள் எத்தனையோ தமிழின் சாயலைப் பெற்று நடக்கின்றன. பின்வருவன அவற்றுட் சில.

Sapato - சப்பாத்து, Mesa - மேசை, Banco - வாங்கு, Vinagre - வின்னாகிரி, Grade - கிறாதி, Chave - சாவி, Algos - அலுகோசு, Padre- பாதிரி, Carrete - கரத்தை, Arratel - இராத்தல், Anona - அன்னாசி, Goiaba - கொய்யா, Couve - கோவா, Saladu - சலாது, Pato - வாத்து, Copo - கோப்பை, Achar - அச்சாறு, Cemento - சீமேந்து, Roda - உரோதை, Alawanco - அலவாங்கு, Tombo - தோம்பு, Capado - கப்பாத்து, Biscoito - விசுக்கோத்து, Cadeira - கதிரை, Almario - அலுமாரி, Pena - பேனா, Janella - யன்னல், Batalhas - பட்டாளம், Gudao - குதம், Jibao - சிப்பம், Peticao - பெட்டிசம், Taberna - தவறணை, Casado - கசாது, Natal - நத்தால், Cruz - குருசு, Petardo - பட்டாசு.

இவை போர்த்துக்கீச மொழியிலிருந்து வந்த சொற்களாகும். இவை போன்ற பல சொற்கள் இன்னுமுண்டு. கத்தோலிக்க சமயத்தவர்கள் உபயோகிக்கும் இன்னும் பலசொற்களுண்டு. அவையெல்லாம் தமிழ்மயம் அடைந்தவை. ஒல்லாந்த மொழியிலிருந்து வந்தவையுமுண்டு. அவற்றுள் சில வருமாறு:

Aardappal - அருத்தாப்பு (கிழங்கு), Ace - ஆசு, Appel - அப்பல், Kantoor - கந்தோர், Kalaver - கலாவரை, Ketel - கேத்தில், Kok - கோக்கி, Tresorie - திறைசேரி, Tolk - தொலுக்கரி, Notaris - நொத்தாரிசு, Vrouw - புரோ, Bakker - வக்கர், Bankerot - வங்குரோத்து, Bottel - போத்தல், Molen - மோன், Rak - இறாக்கை, Laadje-இலாச்சி, Hart - ஆடத்தன், Heer - எர், Boer - வீறு, Fiscal - பிசுக்கால்.

ஆங்கில மொழியிலிருந்து வந்தேறின சொற்களாவன:

Acre - ஏக்கர், Attorney - தரணி, Arrowroot - அரோட்டு, Engineer - இஞ்சினியர், Couch - கௌச்சு, Coat - கோற்று, Coffee-கோப்பி, Globe (lamp) - குளோவர், Government - கோறணமேந்து, Cheque - செக்கு, Yard - யார், Jubilee - யூபிலி, Doctor - இடாக்குத்தர், Pencil- பென்சில், Bill - வில், Wine - உவைன், Circus - சறக்கீசு, Shop - சாய்ப்பு, Soup - சுப்பு.

இஃதிவ்வாறாக, வேற்றுநாட்டு மொழிகள் தமிழில் வந்து கலந்து வழக்கில் வழங்குமாறு கண்டனம். புத்தம் புதிய கலைகளை நாம் படிக்க எத்தனிக்கும் போதோ, அன்றேல் அவற்றை நமது சொந்தமாக்க விரும்பினால் இவ்வாறு சொற்கள் தமிழ் மொழியில் புகுந்தேறும். வந்தேறு குடிகளை நம்மயமாக்குவது போல் வந்தேறு சொற்களையும் தமிழ் மயமாக்க வேண்டுமென்பதே நியதி. இந் நியதி நம் மொழிக்குமாத்திரம் உரியதன்று. கட்டுமரம் உபயோகித்தறியாத ஆங்கிலேயர், அச்சொல்லை ஆங்கிலமயத்தில் தங்கள் மொழியில் ஏற்றுக்கொண்டனர். அப்படியே மிளகுதண்ணீர், அணைக்கட்டு, வெற்றிலை, அரிசி, இஞ்சி, கறி, மாங்காய், அம்பர், மக்கு, சுருட்டு, வீணை, என்ற சொற்கள் ஆங்கில மொழியில் ஏறியுள்ளன. மாற்றமடைந்தே ஏறியுள்ளன என்பதே கருத்திலிருத்த வேண்டியது.

மொழி பெயர்தல் என்பது தமிழ்மொழிக்குப் புதியது அன்றென்றும், அது தொல்காப்பியர் காலந் தொட்டு நடை முறையிலுண்டு என்பதும், அத் துறையில் ஈடுபடுவோர் அதனை அதர்ப்பட யாத்தல் வேண்டுமென்பதும், அதற்குத் தமிழ் மரபு நன்கு தெரிந்திருத்தல் வேண்டுமென்பதும், இன்னும் மரபொடு வழக்கும் வரன்முறையும் கைதேர்ந்தபழக்கமும் வேண்டுமென்பதும், வடமொழிக்குக் கூறிய இலக்கணமெல்லாந் தெரிந்து சொற்களுக்குத் தமிழ்ச் சாயல் கொடுத்தல் வேண்டுமென்பதும், இவை தவறின் பிறிதுபிறிதாகும் என்பதும், இவையிற்றை எடுத்துக்காட்டு முகத்தால் உதாரணங்கள் தந்தும், பிறநாட்டு நல்அறிஞர் சொற்கள் தமிழ்ச் சாயல் பெற்று இயங்குமாறு தந்தும், மொழிபெயர்ப்பு எவ்வாறு முறைப்படி நடைபெற வேண்டுமென்பதும் காட்டிக் கட்டுரையை முடிக்கலாயிற்று.

சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. க. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(188-ம் பக்கத் தொடர்ச்சி)

சேரமரபினர்

நம் பைந்தமிழ்நாடு பழம்பெருநாடு; தண்டமிழ் வேந்தர் மூவரால் ஆளப்பட்டு வந்தது. அவ்வேந்தர்கள் சேர சோழ பாண்டிய மரபினர் ஆவர். அவர்களேயன்றி வேறுபல குறுநில மன்னர்களும் இருந்தனர். சேரர் மேல்கடற்கரைப் பகுதியையும் அதையடுத்த உள்நாட்டுப் பகுதியையும் ஆண்டுவந்தனர். சோழர் கிழக்கடற்கரைப் பகுதியையும் அதையடுத்த உள்நாட்டுப் பகுதியையும் ஆண்டுவந்தனர். பாண்டியர் தமிழ்நாட்டின் தென்கோடிப் பகுதியை ஆண்டுவந்தனர்.

நெய்தல்நிலத் தலைவனைச் சேர்ப்பன் என்பது வழக்காதலின், கடற்பகுதியை நாடாக்கி வாழ்ந்த மரபினர் சேரர் என வழங்கப்பட்டனர் போலும். இம்மரபினரை வானவர் என்றும் குறிப்பதுண்டு. பரசுராமரால் வடக்கிருந்து கொணரப்பட்ட தெய்வத்தன்மைபொருந்திய மரபினர் இவர் எனக் கேரளவரலாற்று நூல்கள் குறிப்பது உண்மையாகலாம் என நினைத்தற்கிடனளிக்கிறது, இவ்வானவர் என்னும் சொல். இன்றும் சேரநாட்டில் தெய்வநம்பிக்கையும் தெய்வவழிபாடும் சிறந்து விளங்குகின்றன. இம்மரபினருள்சிலர் 'வானவரம்பன்' எனக் குறிக்கப்பட்டுள்ளனர். இத்தொடர் 'வானவன்பன்' என்று இருக்கவேண்டும் எனக் கூறுகின்றார் வித்வான், திரு. வெ. சு. சுப்பிரமண்யாச்சாரியார் அவர்கள். சேரமன்னர்கள் வானவர் அன்பர்களாக வாழ்ந்து வந்தனர் என்பதை இன்றும் சேரநாட்டில் காணலாம். இவருக்கு இலாஞ்சனை வில்.

இவர்களது நாடு குடநாடும் குட்டநாடுமாம். பூழிநாடும் கொங்கு நாடும் இவர்களது ஆட்சியில் அடங்கியன. குடநாடு மேல்கடற் கரைக் கண்ணதான சேரநாட்டின் வடபகுதியது; குட்டநாடு தென்பகுதியது.

மாந்தை, முசிறி, தொண்டி, வஞ்சி ஆகியன இவர்களுக்குரிய தலைநகரங் களாக விளங்கியன. இந்நாட்டிற் சிறந்ததோராறு ஆன்பொருநையாம் சுள்ளியம் பேராறு. கோசருக்குரியதாகிய செல்லூர் என்னுமிடத்தில் பரசுராமன் வேள்வி செய்ததாக அகநானூற்று 220-ம் செய்யுள் குறிக் கின்றது. இச்செய்தி, கேரளநாட்டைத் தோற்றுவித்தவன் பரசுராமன் என்னும் வரலாற்றை வலியுறுத்துவதற்குத் துணையாகலாம்.

உதியன் சேரலாதன்

இவன் முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவரால் புகழப்பட்ட வன் (புறம் 2). நக்கீரர், வெள்ளிவீதியார், மாமூலனார், கழாத்தலையார் ஆகிய புலவர்களும் இவனைப் புகழ்ந்துள்ளனர். கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானும் இவனது புகழைக் குறித்துள்ளான். இவன், மண்டிணிந்த நிலனும், நிலனேந்தியவிசும்பும், விசும்புதைவரு வளியும், வளித்தலைஇய தீயும், தீமுரணிய நீருமென்றாங் கைம்பெரும்பூதத் தியற்கைபோலப் போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சிய தகலமும் வலியும் தெறலும் அளியு முடையவன். பால்புளிப்பினும் பகலிருளினும் நால் வேத நெறிதிரியினும் திரியாமந்திரச் சுற்றத்தவரை யுடையவன்; அலங் குளைப் புரவியைவரோடு சினைஇ நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையா தளித்தவன் (புறம் 2). இவன் கொடைக்கட னென்ற கோடா நெஞ்சினன் (அகம் 168). குழுமூர் என்னுமிடத்தில் இவனமைத்த அறச்சாலையில் எப்பொழுதும் மக்களது ஆரவாரம் மிக் கிருக்கும். இவன் தன் நாட்டினைப் பெருக்கியவன் (அகம் 65). இவன் கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் இவனது வெண்டலைப் புணரி குட கடற் குளிக்கும் (புறம் 2). பாரதப்போரில் வீரர்களுக்குப் பெருஞ் சோறளித்தனன் இவனென்பர் சிலர் (புறம் 2). தன் நாட்டிருந்து வடநாடுசென்று பாண்டவர்களுக்குத் துணையாகநின்று வீரசுவர்க்க மடைந்த வீரர்களின் நினைவுநாளில் பெருஞ்சோற்றுமிகுபதம் வரையா தளித்தனன் இவன் என்பர் சிலர் (அகம் 233).

முடிநாகராயர் முதற்சங்கத்துப் புலவர்களுள் ஒருவர். புறநானூற்று இரண்டாம்பாட்டாகிய இப்புலவரது பாட்டினைத் துணையாகக்கொண்டு இம்மன்னன் பாரதப்போர் நடந்த காலத்தவன் என்பர். பதிற்றுப் பத்துப் பதிக ஆசிரியர், "மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி

இன்னிசை முரசி னுதியஞ் சேரற்கு வெளியன் வேண்மாள் நல்லினி யீன்ற மகன் ....இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்" என்பர். கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் தந்தையாகிய குடக்கோ நெடுஞ்சேரலாதனே இமயவரம்பன் என்பர். பதிற்றுப்பத்துப் பதிக ஆசிரியர் குட்டுவன் தந்தையை இமயவரம்பன்எனக் குறிக்காது, குடக்கோநெடுஞ் சேரலாதன் எனவே குறித்துள்ளார். ஆதலின் இமயவரம்பனும் கடைச் சங்க காலத்தவனாகிய குடக்கோநெடுஞ்சேரலாதனும் ஒருவராவரோ என்னும் ஐயம் எழுகிறது. குட்டுவன் காலத்துக்குச் சற்று மூத்திய வனாகிய நன்னன், 'நன்னன்உதியன்' எனவும் குறிக்கப்படுதலால், வேளிர்குலத்தவனாகிய நன்னன், உதியன் என்னும் மன்னனுக்கு அடங்கினவன் என்பது பெறப்படுகிறது. ஆதலின், பாரதக்காலத்து உதியன்வேறு, குடக்கோநெடுஞ்சேரலாதனுடைய தந்தையாகிய உதியன் வேறு என்பதும் புலனும். அகம் 233, 65, 168ம் பாடல்கள் குறிப்பன பிற்பட்ட உதியனையேயாகலாம்.

குடக்கோநெடுஞ்சேரலாதன்

இவன், பரணர், கழாத்தலையார், குமட்டூர்க்கண்ணனார் ஆகிய புலவர்களால் புகழப்பட்டுள்ளான் (புறம் 62, 63, 65, 368; பதிற் 11–20): பேரிசை யிமயம் தென்னங் குமரியோ டாயிடை மண்மீக் கூறுநர் மறந்தபக்கடந்து அரசாண்டனன்; கூலம்பகர்நர் குடிபுறந்தராஅக் குடிபுறந்தருநர் பாரமோம்பினன்; அக்குருானனைய வண்மையன்; செருப்புகல் முன்பன்; கூற்று வெகுண்டுவரினும் மாற்றும் ஆற்றலன்; எழுமுடியாரம் அணிந்தவன்; சான்றோர் மெய்ம்மறை; களிற்றுப்படை மிக்கவன்; காமவேட்கையினும் போர்வேட்கை மிக்கவன்; ஆறிய கற்பி னடங்கிய சாயல் ஊடினு மினிய கூறும் இன்னகையாளை மனைவியாகப் பெற்றவன்; பகைவர் பணிந்து திறைதரக் கொண்டு அவர்களை ஆதரித்த வன்; நண்ணார் தேஎத்தும் பொய்ப்பறியலன்; கொடைக்கட னமர்ந்த கோடா நெஞ்சினன்; வளிவழக் கறுத்த வங்கப் படையினன்.

இவனது நாடு கடலக வரைப்பின் பொழில் நிறைந்தது; பசியும் பிணியு மின்றி விளங்கியது. இவனது நாட்டில் மழைவேண்டும்பொழுது பொழியும். முழவுமருள் திருமணிகள் நிறைந்த நாடு இவனது நாடு. கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும் வளம்பல நிகழ்தரும் நனந்தலை

நன்னாடாகிய இவனது நாடு விழவறு பறியா முழவிமிழ் மூதூர்களை யுடையது; ஒன்றுமொழிக் கடங்கிய கொள்கை, என்றும் பதிபிழைப் பறியாது துய்த்தலெய்தி நிரையும் ஒரீஇய வேட்கைப் புரையோர் மேயின ருறையும் பலர்புகழ் பண்பினையுடையது (பதிற்).

வலம்படு முரசிற் சேரலாதன் முந்நீரோட்டிக் கடம்பறுத் திமயத்து முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார் பணிநிறை தந்த பாடுசால் நன்கலம் பொன்செய் பாவை வயிரமொ டாம்பல் ஒன்றுவாய் நிறையக் குவைஇ, அவற்றை வரையாது வழங்கினன் (அகம் 127, 347).

இம்மன்னனும் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் ஒருவரை யொருவர் பகைத்து நின்று, களங்கொளற் குரியோரின்றி இருவரும் வீழ்ந்தனர். இம்மன்னர்களின் மனைவியர் ஆண்டுத் தத்தம் கணவரது மார்பகலம் பொருந்தி யமைந்தனர்; இவர்கள் வாடாப் பூவி னிமையா நாட்டத்து நாற்றவுணவி னோரு மாற்ற அரும்பெற லுலகம் நிறைய விருந்து பெற்றனர் (புறம் 62).

கபிலரால் புகழப்பெற்ற கழாத்தலையார் என்னும் புலவர் ஓர்நாள் இச் சேரலாதனைக் கண்டு புகழ்ந்து பாட, மன்னன் பல பரிசுகள் அளித் தனன். அப்பரிசால் மனமகிழ்ந்திருக்கிற புலவரைக் கண்டு 'நாளைக்குப் போர்க்களத்து வருக, ஆங்கு என் கழுத்துள்ளதாகிய ஆரம் உமக்குரிய தாகும்' என்றான். புலவரும் அங்ஙனமே மறுநாள் போர்க்களம் சென்றார்; சேரலாதனும் சோழனும் மடிந்து கிடப்பதைக் கண்டார்; ஆரம் தன் கழுத்ததாதலின், மொழிகோடாது அளித்தற்கில்லையே என உயிர்போகாது கிடந்த சேரமானைக் கண்டார். அவன் பேசமுடியாது உயிர்போகும் நிலையில் உள்ளனன்; ஆகையால், அவனது கருத்தை யுணர்ந்த புலவர், தாமேசென்று ஆரத்தை எடுத்துக்கொண்டார். பிறகு மன்னனும் இவ்வுலகம் விட்டேகினன். இச்செய்தியை அக்கழாத்தலை யார் என்னும் புலவரே கூறியிருக்கின்றனர் (புறம் 368).

இவனுக்கு வேளாவிக்கோமான் பதுமன் தேவியும், சோழன் மணக்கிள்ளியும் ஆகிய இருவர் மனைவியர். களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரல், கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன், ஆடுகோட் பாட்டுச்சேரலாதன் ஆகிய மூவர் மக்கள் (பதிற்-பதி).

தன்னைப் பதிற்றுப்பத்து இரண்டாம்பத்தால் புகழ்ந்து பாடிய குமட்டூர்க்கண்ணனார்க்கு இம்மன்னன் உம்பற்காட்டு ஐந்நூறூர் பிரமதாயம் கொடுத்து, முப்பத்தெட்டு யாண்டு தென்னாட்டுள் வருவதனிற் பாகம் கொடுத்தான் (பதிற்-பதிகவுரை).

கடலோட்டிய வேல்கெழு குட்டுவன்

இவன் இமயவரம்பனாகிய குடக்கோ நெடுஞ்சேரலாதனின் மைந்தன்; வலம்படு சீர்த்தியுடையன்; வசையில் நெடுந்தகை; தொலையாக் கற்பன்; ஓம்பாவீகை வண்மகிழ் சுரந்து கோடியர் பெருங்கிளை வாழச் செய்தவன்; தான் பெற்றன பெரியவாயினும் அரியவென்னாது ஓம்பாது ஈந்தவன்; எனது துன்பத்தை நீக்குக எனப் பிறரிடம் கூறுதலைக் கனவினும் அறியாதவன்; வீரர் புகழ்தற்குக் காரணமான நிரம்பிய வன்மையும் நோயில்லாமையுமுடைய யாக்கையன்; எழுமுடியார மணிந்தவன்; கொண்டமடம் பட்டோன்; வணங்கிய சாயலும் வணங்கா ஆண்மையு முடையன்; கொடி நுடங்கு தெருவின் நன்னுதல் விறலியர் ஆடும் தொன்னகர் வரைப்பினன்; காவிரியனையன்; முக்கூடலனையன்; மகளிர் இன்பச் சிறப்புடையவன்; பாசறையி லிருக்கையில் இராப்பொழுதெல்லாம் உறக்கமின்றிப் பகைவரை வெல்கைக்குச் சூழ்பவன்; மன்பதை மருள அரசுபடக் கடந்து பின்னும் போர்மேல் வேட்கையுமுடையவன்; பிறமன்னர்களால் புகழப்பட்டவன்; கடற்போர் புரிந்தவன்; இமயத்துக்கும் குமரிக்கும் இடைப்பட்டோர் தன் ஏவல்கேட்டொழுகுமாறு ஆண்டவன்; போரடு தானை யுடையவன்; விறலியர், மள்ளர், அகவலர் முதலியவர்கட்குப் பரிசில் நல்குபவன்.

இவனது செல்படை மறவர் தண்டுடை வலத்தர்; நெடுவெள்ளூசி நெடுவசி பரந்த வடுவாழ் மார்பினர்; மான மைந்தர்; நொசியா நெஞ்சினர்; ஓடாப்பீடர். இவனது நாட்டில் குன்று வறங்கூரச் சுடர் சினந்திகழ அருவியற்ற பெருவறற் காலையும் போராறு நீரொழுது பாயும். வேனிற்காலத்தே மக்கள் குளிர்ச்சியின் பொருட்டு இவ்யாற்றை யடுத்த சோலைகளில் தங்கி வாழ்வர்.

இவன் காலத்து இவனது நாட்டில் வஞ்சி, தொண்டி, கழுமலம், முசிறி, மாந்தை ஆகிய நகரங்கள் சிறந்து விளங்கின. இவன் முந்நீரோட்டிக் கடம்பெறிந்தது இலக்கியங்களில் புகழப்பட்டதொரு

போர்ச் செயலாகும். மோகூர்ப்பழையனைத் தன் நண்பன் அறுகைக்காக எதிர்த்து நின்று, அவனது காவன்மரமாகிய வேம்பினைத் தடிந்து, வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர் பல்லிருங் கூந்தல் முறற்சியால் குஞ்சரவொழுகை பூட்டித் தன்னூடு கொணர்ந்தனன். இவ்விரண்டு செயல்களே பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டன. பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்துப் பதிகம் கூறும பிறபோர்ச்செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை.

இவனைப் புகழ்ந்து பாடிய புலவர்கள் பரணர், அம்மூவனார், கொள்ளிக்கண்ணன், சாகலாசனார், நக்கீரர். இவனைப் பதிற்றுப் பத்து ஐந்தாம்பத்தால் புகழ்ந்தவர் பரணர். அப்புலவர்க்கு உம்பற் காட்டு வாரியையும் தன்மகன் குட்டுவன்சேரலையும் பரிசாக அளித்தனன் குட்டுவன்.

அந்துவன் சேர லிரும்பொறை

அந்துவன் சேரல் செல்வக்கடுங்கோ வாழியாதனின் தந்தை. இவனது தலைநகர் கருவூர் (வஞ்சி). ஓர்நாள் சோழன் முடித்தலைக் கோப் பெருநற்கிள்ளி, மதங்கொண்ட யானையூர்ந்து தனது நகருள் வந்துகொண்டிருந்ததைச் சேரல் கண்டான். அவ்வமயம் சேரல் அரண்மனை மாடியில், ஏணிச்சேரி முடமோசியாரோடு உரையாடி மகிழ்ந்திருந்தனன்; யானை மீது ஊர்ந்து வருபவனைக் கண்டதும் மன்னனென உணர்ந்து, புலவரை நோக்கி, 'இவன் யார்' என்றனன். புலவர் பெருமான், சோழனுக்கும் சேரனுக்கும் உள்ள பகைமையை அறிவார். ஆதலின், களிறுகையிகந்து பகையகத்துப் புகுந்தமையான், கிள்ளிக்குத் தீங்குறும் என்றஞ்சி, "பழன மஞ்ஞை யுகுத்த பீலி கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும் கொழுமீன் விளைந்த கள்ளின் விழுநீர் வேலி நாடுகிழவோன்; இவன் களிறு மதம்பட்டது; அதனால், இவன் நோயின்றிப் பெயர்க:" எனக்கூறி மன்னனை வாழ்த்தினர். கிள்ளியும் நோயின்றி அகன்றனன்.

இவன் காலத்துச் சிறந்து விளங்கிய வள்ளல் ஆய் அண்டிரன். இவனைப்பாடிய புலவர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

[தொடரும்]